# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.333/பேரு/2023
நாள். 27 .12.2023

திரு. எம்.பாலசுப்ரமணியன்,
அண்ணாமலை நகர் (அஞ்சல்)
சிதம்பரம் வட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர்சிறப்புநிலை பேரூராட்சி,
சிதம்பரம் வட்டம் .... எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், KRM நகர், , 8வது குறுக்கு தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எம்.பாலசுப்ரமணியன், என்பவரது மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2023 அன்று பெறப்பட்டு, 333/பேரு/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், KRM நகர், 8வது குறுக்கு தெரு, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எம்.பாலசுப்ரமணியன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், KRM நகர், 8வது குறுக்கு தெரு, என்ற முகவரியில் வசித்து வருகிறோம். சர்வே எண். 196/5.Bல் உள்ள 0.61 செண்ட் இடம் 16.8.1997ல் சிதம்பரம் சார் பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த 0.61 செண்ட் இடம் 2002ல் செங்கல்பட்டு நகர் ஊரமைப்பு துறை இயக்குனர் மூலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அனுமதி பெறபட்டுள்ளது. நான் அமைத்துள்ள மனைப்பிரிவின் பெயர் வைரவன் நகர் 11.07.2003ல் அனுமதி பெறப்பட்டது.

மேற்படி வைரன் நகரில் கீழ்மேல் வடபுரம் 177, தென்புரம் 172 தென்வடல் உள்ள 52.35 சதுரடி மனையை பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும், பொதுவழி பாதையாக 31.08.03 அண்ணாமலை நகர் பேரூராட்சிக்கு ரூபாய் 45.000 ரொக்கமாக செலுத்தி தானபத்திரம் மூலம் ஒப்படைத்து விட்டேன்.

மேற்படி மனைப்பிரிவில் மனை எண். 1—ஐ 2008ல் விற்பனை செய்துள்ளேன். மீதமுள்ள மனைகள் எனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது.

மனை எண்.1—க்கு கீழ்புறம் கீழ்மேல் 30 x 70 உள்ள சொத்து எனக்கு பாத்தியமான 0.61 செண்ட்டில் உள்ள சொத்தாகும். ஏனக்கு பாத்தியமான இந்த சொத்தில் KRM நகர் ஏழாவது கிராசில் வசிக்கும் திருமதி K. லட்சுமி என்பவரும், எட்டாவது கிராசில் வசிக்கும் குணசேகரன் என்பவரும் எனது காலிமனையில் அன்று முதல் 20 ஆண்டுகளாக குப்பைகளை கொட்டியும், சாக்கடை (சிறுநீர் மலம் கலந்த கழிவு நீரை) மேற்படி மனையில் வெளியேற்றி வருகின்றனர். லட்சுமி மற்றும் குணசேகர் வீட்டில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படிக்கும் மாணவர்கள் அளவுக்கு அதிகமாக தங்கியிருப்பதால் இவர்களின் செப்டிக்டேங் நிரம்பி விடுவதால் அதை பணம் கொடுத்து இறைத்து அப்புறப்படுத்தாமல் எனது காலிமனையில் திறந்த வெளியில் வெளியேற்றி வருகின்றனர்.

இதனால் KRM நகரில் வசிக்கும் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படுவது மட்டுமல்லாமல் சுற்றுப் புற சூழலும் பாதிக்கப்படுகிறது. எனது மற்ற மனைப்பிரிவுகளை நான் விற்பனை செய்திலும் சிரமம் ஏற்படுகிறது. இவர்கள் செய்யும் குற்ற செயலால் மனை எண் 1—ஐ கிரயம் வாங்கியும் வீடு கட்ட முடியாமல் கஷ்டபடுகிறோம். லட்சுமி மற்றும் குணசேகரன் தங்கள் வீட்டு சாக்கடை கழிவுகளை வெளியேற்றுவதை தடுத்து நிறுத்திக்கோரி தமிழக பேரூராட்சிகளின் இயக்குநர்களுக்கும், இணை இயக்குநர்களுக்கும், கடலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கும், நகராட்சி நிர்வாக அரசின் முதன்மை கூடுதல் செயலாளர்களுக்கும் பொது சுகாதார துறைக்கும் அண்ணாநகர் பேரூராட்சியின் E.O.வுக்கும், பேரூராட்சி மன்ற தலைவர்களுக்கு எண்ணற்றமுறை புகார் மனுக்கள் கொடுத்தும், மின்னஞ்சல் அனுப்பியும் எனக்கு 20 ஆண்டுகளாக நீதி கிடைக்காமல் போராடி வருகிறேன்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவரான தாங்கள் இம்மனுவோடு பார்வை 1 முதல் 20 வரை உள்ள ஆவணங்களை பரிசீலினை செய்து எனது பூர்வ சொத்தில் நான் வீடு கட்ட லட்சுமி, குணசேகர் ஆகிய இருவர் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும், லட்சுமி வீட்டின் செப்டிக்டேங்க் மற்றும் குணசேகர் வீட்டின் செப்டிக்டேங்க் பழுதடைந்த விட்ட காரணத்தாலும் தான் அவர்களின் கழிவு நீர் எனது மனைபிரிவிற்கு வருகிறது. எனவே இருவரின் செப்டிக்டேங்குகளை இடித்து விட்டு புதிய செப்டிக்டேங்க் கட்ட உத்திரவிடுமாறும் தங்களை கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் அண்ணாமலை நகர் பேரூராட்சி, செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) அண்ணாமலை நகர் பேரூராட்சி, செயல் அலுவலர் தனது 16.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது உண்மைக்கு புறம்பான அம்சங்களுடனும் சட்டத்திற்கு அப்பாற்பட்டும் அமைந்து காணப்படுகிறது. மனு தள்ளுபடிக்கு உகந்தது ஆகும்.

2) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர் பேரூராட்சியானது கடந்த 04.04.1963ம் ஆண்டு முதல் முதல்நிலை பேரூராட்சியாக துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு 31.05.1994ம் வருடம் முதல் சிறப்புநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. புகழ்மிக்க சிதம்பரம்

அண்ணாமலை பல்கலைக்கழகம் இப்பேரூராட்சியின் எல்லைக்குட்பட்டு அமைந்து பல மாணவி மாணக்கர்களின் கல்வித்திறன் மேம்பாடு அடைய பயன்பட்டு வருகிறது.

3) பல சிறப்பு மிக்க பேரூராட்சி மன்ற தலைவர்கள், செயல்திறன் மிக்க செயல் அலுவலர்கள் இப்பேரூராட்சியில் நன்முறையில் பணிபுரிந்து வந்துள்ளனர். இப்பேரூராட்சியின் மொத்த ஜனத்தொகை 16500ம் 15 வார்டுகளை உள்ளடக்கி அமைந்துள்ளது. இப்பேரூராட்சியில் திறன்மிக்க செயல் அலுவலர், சுமார் 8 அலுவலக பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள் 15 நபர்கள், திடக்கழிவு பணியாளர்கள், டெங்கு களப்பணியாளர்கள் மற்றும் குடிநீர், தெருவிளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மொத்தமாக சுமார் 47 நபர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.

4) மனுதாரர் தனது மனுவில் சொல்லியுள்ளது போல் அவர் எவ்வித பொது நலன் சார்ந்த செயல்பாட்டாளர் இல்லை. மாறாக மனுதாரர் அண்ணாமலைநகர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக உண்மைக்கு மாறாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் புகார் மனுக்களை அனுப்பி உள்ளார். மேலும், இதன் அடிப்படையில் பேரூராட்சி மன்ற தலைவர், செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களை பொய்யான புகார்களை கூறி தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நினைக்கிறார். மேலும், மனுதாரரின் அடிப்படை உரிமை நிலையை மீற செயல்படும் வண்ணம் (Beyond the Limit) எல்லாவிதமான பேரூராட்சியின் பணிகளில் தலையிட்டு மனுதரரை கண்டு எல்லோரும் பயப்பட வேண்டும் என்ற நோக்கிலும், அதிகார தோரணையில் தான் சொல்லும் சட்டத்திற்கு புறம்பான அனைத்து செயல்பாடுகளையும் செய்து தர வேண்டும் என்ற ஆணவ போக்கில் செயல்பட நினைக்கிறார்.

5) மனுதாரர் மனுவில் 80 ஆண்டுகளாக வசித்து வருவதாக உண்மைக்கு மாறான அம்சத்தை தெரிவித்துள்ளார். அதற்குண்டான ஆவண சாட்சிங்களை நிரூபணம் செய்யும் கடமை மனுதாரரை சார்ந்தது ஆகும். மனுதாரர் கடந்த 01–09–2003ல் மனுதாரரின் தந்தையார் கே. மருதப்ப முதலியார் அண்ணாமலைநகர் பேரூராட்சிக்கு சுயசிந்தனையுடனும் முழுமனதுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரோடு அமைப்பதற்கு மனைப்பிரிவில் காலி இடத்தை தானமாக கொடுத்துள்ளார். இவ்அம்சத்தை எதிர்மனுதாரர் முழுமனதுடன் ஏற்றுக் கொள்கிறார்.

6) மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட KRM நகர் கடந்த 1990ல் மனைப்பிரிவு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் ஏழாவது கிராஸ் திருமதி லட்சுமி மற்றும் எட்டாவது கிராஸ் குணேசகரன் இருவரும் கடந்த 20 வருடங்களாக தமக்குள்ள மனையில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். திருமதி லட்சுமி ஏழாவது கிராஸ் மனை எண். 76 மற்றும் குணசேகரன் எட்டாவது கிராஸ்மனை எண். 75ல் குடியிருந்து வருகிறார். இருவரும் கட்டிட முன் அனுமதி பெற்று குடியிருப்பு கட்டிடம் கட்டியுள்ளார். திருமதி லட்சுமி மனை வடக்கு புறம் பார்த்த வண்ணம், குணசேகரன் மனை தெற்குபுறம் பார்த்த

வண்ணம் அமைய பெற்றுள்ளது. திருமதி லட்சுமி மற்றும் குணசேகரன் இருவரும் பாதுகாப்பு கருதி பக்கா காம்பவுண்ட் சுவர் மேற்குபுறம் கட்டி உள்ளனர். காம்பவுண்ட் சுற்றுக்கும் மேல்புறம் பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட 30' அடி சாலையாகும். சாலைக்கு மேல்புறம் மனுதாரரின் சொத்து அமைந்துள்ளது இவ்வாறுள்ள நிலையில் ரோட்டுக்கும் மனுதாரர் சொத்து சுமார் 3 அடி பள்ளத்தில் தாழ்வாக அமையப்பட்டுள்ளது. மழை காலங்களில் மழைநீர் ரோட்டிலிருந்து 3 அடி மேல்புறம் அமைந்துள்ள மனுதாரர் சொத்துக்கு வடிகிறது. எப்பொழுதுமே மேட்டிலிருந்து பள்ள பகுதி (தாழ்வான) நீர் வடிவது இயற்கையே. மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்ட லட்சுமி, குணசேகரன் இருவரும் தத்தமது மனைப்பிரிவில் வீடு கட்டி பாதுகாப்பு கருதி நான்குபுறம் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது. அதுவும் வீட்டிற்கு மேல்புறம் சாலை அமைந்துள்ளதால் காம்பவுண்ட் சுவர் பக்காவாக அமைந்துள்ளது. திருமதி லட்சுமி குணசேகரன் வீடுகள் கழிவுநீர் அவர்களது வீட்டு எல்லைப்பகுதிகளுக்கு பாத்தி கட்டி செடிகளுக்கு மரங்களுக்கு நீர் ஆதாரம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7) மனுதாரர் கடந்த 28.05.2018ல் செயல் அலுவலர் அண்ணாமலைநகர் பேரூராட்சிக்கு மேற்கண்ட அம்சம் தொடர்பாக புகார் கடிதம் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் செயல் அலுவலர், 30.05.2018ல் திருமதி லட்சுமி, குணசேகரன் இருவருக்கும் விசாரணை கடிதம் அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் பணியாளர்கள் நேரடியாக களப்பணி ஆய்வுச் செய்யப்பட்டது. பணியாளர்கள் நேரடியாக களப்பணி செய்ததில் மனுதாரரின் புகார் மனு எவ்வித முகாந்திரம் காணப்படவில்லை. புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட லட்சுமி, குணசேகரன் இருவரும் 28.06.2018ல் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டவாறு நாங்கள் எவ்வித கழிவுநீரும் மனுதாரர் சொத்தில் விடவில்லை என விளக்க கடிதம் கொடுத்துள்ளனர்.

8) மேலும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்ட இருவரின் செப்டிக் டேங்க் அவர்களது மனைப்பகுதியில் உள்ளடங்கி உள்ளது. அதற்கு அரணாக மேல்புறம் காம்பவுண்ட் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் தவறான தகவலை தந்து ஆதாரம் தேட முற்படுகிறார்.

9) மனுதாரர் சொத்தில் அடங்கியுள்ள மனைப்பகுதிகள் மிகவும் தாழ்வான பகுதியில் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் மழைநீர் அதிகளவில் தேங்கி விடும். மேலும், மனுதாரரின் அடாவடி விதண்டவாத போக்கு மற்றும் மனைப்பிரிவின் விலை அதிகப்படியாக நிர்ணயம் செய்த நிலையில் வெளி நபர்கள் யாரும் மனையை வாங்க அச்சப்படுகின்றனர்.இதை மறைத்து புகார் மனுவில் தவறான தகவலை தந்துள்ளார். மனு தள்ளுபடிக்குஉகந்தது ஆகும்.

10) பின்னிட்டு எதிர்மனுதாரர்க்கு புகார் மனு சம்பந்தமாக ஏதும் கூடுதல் ஆவணங்கள் கிடைக்கபெறும் பட்சத்தில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையும் எதிர்மனுதாரர் நிலை நிறுத்திக் கொள்கிறார்(reserve the rights to be filed the Addiitional Written Statement).

11) மனுதாரர் மனுவில் வெளிப்படையாக சொல்லியுள்ள அம்சங்களைத் தவிர்த்து இதர அம்சங்களை இம் எதிர்மனுதாரர் மறுதளிக்கிறார்.

12) ஆகவே, மேண்மைக்கு முறைமன்ற நடுவர் அவர்கள் மனுதாரரின் தவறான புகார் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய இம் எதிர்மனுதாரர் பிராத்திக்கிறார்.

(4) மனுதாரர் மற்றும் அண்ணாமலை நகர் பேரூராட்சி, செயல் அலுவலரும் 20.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 16.12.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) மனுதாரர் விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலம் அளிக்காமல் சென்று விட்டார்.

(6) அண்ணாமலை நகர் பேரூராட்சி, செயல் அலுவலர் 20.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சிதம்பரம் அண்ணாமலை பேரூராட்சி KRM நகரில் மனை எண்.76ல் லட்சுமி என்பவரும் மனை எண். 75ல் திரு.குணசேகரன் என்பவரும் குடியிருந்து வருகின்றனர். இவர்கள் இருவரும் தங்களது வீடுகளைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பியுள்ளனர். எனவே அவர்களது பாத்தி கட்டி, அவ்வீடுகளின் கழிவு நீர் அவர்கள் வீட்டிலேயே செடி, கொடிகளுக்கு விடப்படுகின்றன. எனவே அவர்களது வீடுகளிலிருந்து கழிவு நீர் ஏதும் மனுதாரரின் மனையில் செல்வதில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் இந்நேர்வு தொடர்பான எதிர் 19.12.2023 நாளிட்ட வாதுரையை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

(7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அண்ணாமலை நகர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

அண்ணாமலைநகர் சிறப்பு நிலை பேரூராட்சியில் KRM நகர், மனைப்பிரிவில் குடியிருக்கும் திருமதி லட்சுமி மற்றும் திரு. குணேசகரன் ஆகியோர் தங்கள் வீட்டின் சாக்கடை கழிவுகளை தனது மனைப்பிரிவில் வெளியேற்றுகின்றனர் என்றும் எனவே தன்னுடைய மனையினை விற்பனை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் சுகாதார சீர்கேடு, என்றும் தெரிவித்து இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்றத்திற்கு மனு அளித்துள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள சிதம்பரம் அண்ணாமலை பேரூராட்சி KRM நகரில் மனை எண்.76ல் லட்சுமி என்பவரும் மனை எண். 75ல் திரு.குணசேகரன் என்பவரும் குடியிருந்து வருகின்றனர். இவர்கள் இருவரும் தங்களது வீடுகளைச் சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பியுள்ளனர். எனவே அவர்களது பாத்தி கட்டி, அவ்வீடுகளின் கழிவு நீர் அவர்கள் வீட்டிலேயே செடி, கொடிகளுக்கு விடப்படுகின்றன. எனவே அவர்களது வீடுகளிலிருந்து கழிவு நீர் ஏதும் மனுதாரரின் மனையில் செல்வதில்லை என்பதை அண்ணாமலை நகர்சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் திருமதி லட்சுமி மற்றும் திரு. குணேசகரன் ஆகியோர் தனது மனையில் கழிவுநீர் வெளியேட்டுவதால் சுகாதாரக்கேடு ஏற்படுவதாக தெரிவித்துள்ளார். அதற்கு ஆதாரமாக எந்தவித புகைப்படத்தினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்காத நிலையில் மனுதாரரின் கோரிக்கையில் எந்தவித முகாந்திரமும் இல்லையென கருதி அண்ணாநகர் சிறப்புநிலை

பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று இத்துடன் முடித்து வைக்கலாம் என கருதி முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் 20.12.2023 அன்று விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலத்தை சமர்பிக்காமல் சென்றது இம்முறைமன்றத்தை அவமதித்தாகக் கருதி மனுதாரரை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் இம்முறைமன்றத்தின் மாண்பையும் நேரத்தையும் விரயமாக்கிய கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அண்ணாமலைநகர், KRM நகர், 8வேது குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு. எம்.பாலசுப்ரமணியன் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6(ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு டிசம்பர் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. எம்.பாலசுப்ரமணியன்,
8வேது குறுக்கு தெரு, KRM நகர்,
அண்ணாமலை நகர் (அஞ்சல்)
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
அண்ணாமலை நகர்சிறப்புநிலை பேரூராட்சி,
சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்